தமிழ் எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆடி 13 (28—7—72) வெள்ளி — வெளியூர்: ஆடி 14 (29—7—72) சனி [இதழ்: 38

சென்னையில் மற்றொரு தொழில்பேட்டை

45 பிரிவுகளுடன் அடையாற்றில் அமைகிறது

சென்னை -- அடையாறில் புதிய தொழில்பேட்டை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

தொழில் நுணுக்கக் கருவிகள்-- மற்றும் எலெக்ட்ரானிக் சம்பந்தமான சுமார் 45 பிரிவுகள் இங்கு செயல்படப்போகின்றன.

இவைகளில் 21 பிரிவுகள் இங்கு அமைக்கப்பட்டு 10 பிரிவுகள் உற்பத்தியைத் துவக்கியிருக்கின்றன.

மாநில சுயாட்சி ஆபத்தானதா?

தமிழக ஏடுகளின் தவறான பிரச்சாரம்

ஐதராபாத் தமிழ்ச் சங்க வரவேற்பில் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்கள் கடமை குறித்தும் வலியுறுத்தல்

ஐதராபாத், சூலை 28—

"தமிழ்நாட்டுக்காகவும் -- தமிழர்களின நலனுககாகவும் மட்டும் தி.மு. கழகம் மாநில சுயாட்சி கேட்கவில்லை; அனைத்து மாநிலங்களின் நலனுக்காகவுமே கேட்கப் படுகிறது.

"மாநிலங்களுக்குச் சுயாட்சி உரிமை இருந்தால்தான் மக்களுக்கு இன்னும் பயனுள்ள வகையில் பணியாற்ற முடியும்--மக்களின நலனுககான திட்டங்களைத் திறம்பட நிறைவேற்ற இயலும"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஐதராபாத் தமிழ்ச் சங்கம் அளித்த வரவேற்பு--பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி வலியுறுத்தினார்.

முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் - சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

தமிழ்ச் சங்கத் தலைவர் ஏ. வி. மணி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், ஐதராபாத்திலும், செகந்தராபாத்திலும் உள்ள தமிழ்ச் சங்கங்கள் சார்பிலும், மற்றும் பல்வேறு அமைப்புகளின் சார்பிலும் கலைஞருக்கும்—நாவலருக்கும்—மாதவனுக்கும் ஏராளமான மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

ஆந்திரத்தில் வாழும் தமிழ் மக்கள் பெரும் அளவில் கலந்து கொண்டு வாழ்த்துத் தெரிவித்த இவ்விழாவில், முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"தமிழகத்தில் கேட்கப்படும் மாநில சுயாட்சிக் கோரிக்கை தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டிருககிறது; நாம் கேட்பதெல்லாம், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட மாநில சுயாட்சிதான்; இதன் காரணமாக, இந்தியாவின் ஒற்றுமையோ -- ஒருமைப்பாடோ ஒரு சிறிதும குலையாது!

"மேற்கு வங்க சட்ட அமைச்சர், 'வங்க மண்ணின் புதல்வர்களுக்கே வங்கத்தில் வேலை' என்ற கோரிக்கையை எழுப்பியிருக்கிறார். இந்தக் கோரிக்கை நியாயமற்ற ஒன்றாகும்;

"தமிழ்நாட்டு மக்கள் கேட்கின்ற மாநில சுயாட்சி எந்த ஒருவருக்கும் இன்னலை விளைவிக்காது."

"தமிழ்நாட்டு ஏடுகளில் மாநில அரசு மற்றும் தி. மு. கழகம் ஆகியவற்றின் நடவடிக்கைகளைச் சரியான வகையில் பிரதிபலிக்கவோ, விளக்கிடவோ இயலவில்லை; குறிப்பாகச் சில ஏடுகள். கழகத்தின் மீதும் -- தமிழக அரசின் மீதும் தவறான பொருள் ஏற்படும படியாகச் செய்திகள் வெளியிடுகின்றன.

"சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன், மாநிலங்களுக்குச் சுயாட்சி அளிக்கப்பட வேண்டும்' என்ற கோரிக்கையை ஆதரித்திருப்ப

(4-ம் பக்கம் பார்க்க)

மக்கட் தொகை பெருக்கத்தின் பின்விளைவு

வட மாநிலங்கட்கு மத்திய அமைச்சர் எச்சரிக்கை

புதுடில்லி, சூலை 28—

அனைத்திந்திய சுகாதார அமைச்சர்கள் மாநாடு புதுடில்லியில் நடர்தது; இதில் சுகாதார அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

மாநாட்டில் சுகாதாரத் துறை அமைச்சர் உமா சங்கர் தீட்சித் கலந்துகொண்டு பேசியதாவது:—

"1961-ம் ஆண்டிலிருந்து 1971-ம் ஆண்டு வரையில் உள்ள பத்தாண்டுக் காலத்தில், 10.80 கோடி அளவுக்கு மக்கள் தொகை அதிகரித்திருக்கிறது; முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் அதிகமாகும்.

உத்தரப்பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம ஆகிய மாநிலங்களில் மக்கள் பெருக்கம் அதிகமாக இருக்கிறது; மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தாவிட்டால், அரசாங்கம் எத்தனைத் திட்டங்கள் போட்டாலும் தகுந்த பலன் இருக்காது.

இந்தியாவின் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தக் கருத்தடைத் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்த வேண்டும்; இதற்குத் தேவையான நடவடிக்கைகளை, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டும்."

கர்நாடக அன்னை வாழ்க!

மைசூர் சட்டப்பேரவையில் முழக்கம்

பெயர் மாற்றத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்

பெங்களூர், சூலை 28—

மைசூர் மாநிலத்தை, 'கருநாடகம்' என்று பெயர் மாற்றம் செய்யக் கோரி முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ் கொண்டுவந்த தீர்மானம், மைசூர் சட்டப் பேரவையில் மூன்று நாள் விவாதத்துக்குப்பிறகு நேற்று ஒருமனதாக நிறைவேறிவிட்டது.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது என்பதை அவைத் தலைவர் அறிவித்ததும், அவையினர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து அறிவிப்பை வரவேற்றனர்.

அவைத் தலைவர் இதனை அறிவித்ததும், கன்னட தீவிரவாதியான வட்டல் நாகராசும், மற்றொரு உறுப்பினரான பங்காரப்பாவும் 'கருநாடக அன்னை வாழ்க' என்று முழக்கமிட்டனர்.

'கருநாடகம்' என்று மூன்று தடவை முதலமைச்சர் முழங்க வேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்தினர்; உடனே முதலமைச்சர் அர்ஸ் அப்படிக் கூறியதும், அவை முழுவதுமே அவருடன் சேர்ந்து அவ்வாறு கூறியது.

விவாதத்தின் இறுதியில் பேசுகையில் முதலமைச்சர் அர்ஸ், மக்களின ஒருமித்த விருப்பத்தை நிறைவேற்றவே தாம் அரசு சார்பில இத்தீர்மானத்தைக் கொண்டு வந்ததாகக் கூறினார்.

'கருநாடகம்' என்ற பெயர் மாற்றம் குறித்து சுதந்தராக் கட்சித் தலைவர் இராஜாஜி வெளியிட்டுள்ள சில கருத்துக்கள்பற்றி முதலமைச்சர் அர்ஸ் வருத்தம் தெரிவித்தார்.

'கருநாடகம்' என்பதன் சரித்திரப் பின்னணியையும், அப்பெயரின் பண்டைப் பெருமையையும் இராஜாஜி முழுவதும் உணர்ந்திருந்தால், தமது பத்திரிகையில் இப்படி எழுதியிருக்கமாட்டார் என்று அர்ஸ் கூறினார்.

'கருநாடகம்' என்பதற்காகப் பல வரலாற்று ஆதாரங்களையும் அர்ஸ் குறிப்பிட்டார்; இனிமேலாவது தமது கருத்தை இராஜாஜி மாற்றிக் கொள்வார் என நம்புகிறேன்' என்றும் அவர் தெரிவித்தார்.

போர்க் கைதிகள் விடுதலை பிரச்சினை

பூட்டோ அக்கறையின்மை?

நெருக்கடிகள் நேரிடும் என அச்சம்?

'அணுகுமுறை'பற்றி ஆலோசிக்கிறதாம் மக்கள் கட்சி

புதுடில்லி, சூலை 28—

இந்தியாவில் சிறைபட்டிருக்கும் இராணுவத்தினரை வரைவில் விடுவிகக வேண்டும் என்று இதுவரையில் கூறிககொண்டிருந்த பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, இப்போது அப்பிரச்சினையில அதிகம் அக்கறை காட்டவில்லை எனக கூறப்படுகிறது.

"இந்திய இராணுவத்தால் கைப்பற்றப்பட்டிருக்கும் பாகிஸ்தான் பகுதிகளைத் திரும்பப் பெறுவதே இப்போதைய முதல் பணியாகும்" என்று பூட்டோ கருதுகிறாராம்.

"வங்க தேசத்தை அங்கீகரித்தால்தான், சிறைபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினர் குறித்துப் பேசமுடியும் என்று தெளிவாக்கப்பட்டிருந்தும், வங்க தேசத்தை அங்கீகரிக்கப் பூட்டோ தயக்கம் காட்டி வருவது சரணடைந்த இராணுவத்தினரை திரும்பப் பெறுவதில் பூட்டோ அதிக ஆர்வம் காட்டவில்லை என்பதையே காட்டுகிறது" என்று நோக்காகள் கருதுகின்றனர்.

வங்க தேசத்தை நிபந்தனையின்றி அங்கீகரிப்பதைப் பாகிஸ்தானில் பலர் எதிர்த்து வருவதாகக கூறப்படுகிறது. தற்போதைய சூழ்நிலையில் இவர்களை எதிர்த்து ஒரு நெருக்கடியைச் சந்திக்கப் பூட்டோ விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

இப்போதைய நிலையில், சரணடைந்துள்ள பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளான ஜெனரல் நியாசி, பார்மன் அலி ஆகியோர் பாகிஸ்தான் திரும்பி, இராணுவத் தோல்விக்கும், கிழக்கு வங்காளம் பிரிந்ததற்குமான காரணங்களை வெளியிடுவதை பூட்டோ விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

மேலும், சரணடைந்த இராணுவத்தினரை என்றேனும் இந்தியா விடுவித்துத்தானே ஆகவேண்டுமென்பதாலும் – சிறைபட்டுள்ள இராணுவத்தினர் நன்கு கவனிககப்பட்டு வருவதாலும -- இப்பிரச்சினையில் பூட்டோ தீவிரம் காட்டவில்லை என்றும கூறப்படுகிறது.

வங்க தேசத்தை அங்கீகரிப்பது குறித்து விவாதிப்பதற்காகம் பாகிஸ்தான் தேசிய சட்டமன்றம ஆகஸ்டு மாதம 14-ந்தேதி கூடுகிறது; அதற்குமுன், பூட்டோவின் கட்சி, 'இப்பிரச்சினையை எப்படி அணுகுவது' என்பதைப் பரிசீலிக்குமாம.

இப்பிரச்சினையை உணர்ச்சியின் அடிப்படையில் சிந்திக்கக் கூடாது என்றும், உண்மை நிலையை உணர்ந்து அணுக வேண்டுமென்றும் நாட்டு மக்களை பூட்டோ கேட்டிருககிறார்.

காஷ்மீர் பிரச்சினை -- பூட்டோ பல்லவி

"சிம்லா ஒப்பந்தம் காஷ்மீர் பிரசசினைக்குப் புத்துயிரூட்டி இருக்கிகிறது" என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ கூறியிருககிறார்.

"சிம்லா ஒப்பந்தத்தின் அமுல்மூலம் பாகிஸ்தான் இழந்த பகுதிகளைத திரும்பப்பெறும்" என்றார்.

"சிம்லா ஒப்பந்தம் போர் மறுப்பு ஒப்பந்தம் என்று வர்ணிப்போர் நாட்டுக்குப் பெரும் தவறு இழைததவராவர்; போரை விரும்பும் நாட்டை ஒப்பந்தம் தடுககாது; பாகிஸ்தான் அதன் நலவுரிமைகளை முழு அளவுக்கு, எல்லா வழிகளிலும் பாதுகாக்கும்" என்றார்.

பிற்பட்ட மாணவர்களுக்கு 100 விடுதிகள்

ரூ. 2 கோடி செலவில் கட்டத் தமிழக அரசு திட்டம்

சுதந்தர வெள்ளி விழா நினைவாக நிதியுதவ டில்லியிடம் கோரிக்கை

டில்லி மாநாட்டில் அமைச்சர் க. இராசாராம் வலியுறுத்தல்

புதுடில்லி சூலை 27—

"பெரிய நகரங்கள் — சிறிய ஊர்கள் ஆகியவற்றிலும் வசதிக் குறைவான தனி இடங்களிலும் 100 மாணவர் விடுதிகள் கட்ட கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் செலவாகும்.

"இவ்வாண்டு நமது சுதந்தர வெள்ளி விழா ஆண்டாகும்; எனவே, இந்த ஆண்டிலேயே மேற்கூறியவாறு 100 விடுதிகளுக்கு மத்திய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

"இந்த விடுதிகளுக்கான கட்டட வேலையை 1972 ஆகஸ்டில் தொடங்கி 1973 ஆகஸ்டு 15-ல் முடித்துவிட முடியும்.

"எனவே இந்த நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் பிற்பட்ட — அரிசன சமூகத்தைச் சேர்ந்த மக்களின் நன்மைக்கான இந்த விடுதிகளைக் கட்டி நமது சுதந்தர வெள்ளி விழாப் பரிசாக அளிக்க மத்திய அரசு உதவி புரியவேண்டும்"

என்று புதுடில்லியில் நடைபெற்ற அனைத்திந்திய பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்கள் மாநாட்டில், தமிழக அமைச்சர் க. இராசாராம் அவர்கள் சுட்டிக்காட்டிக்காட்டிக் கேட்டுக்கொண்டார்; அவர் ஆற்றிய உரை வருமாறு :—

பலவீனமான பகுதியினருக்குக் கழக அரசு உதவி

"தமிழக அரசின் பிற்பட்டோர் நலத் துறை, பல்வேறு வகைப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நாங்கள் கல்விக்கு மிகப் பெரும் அளவில் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

பிற்பட்ட மக்கள் முன்னேற்றமடையவும் — மற்றவர்களுடன் சமமான நிலையை அடையவும் கல்விதான் அடிப்படை அம்சம் என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை.

தமிழ்நாடு அரசு பிற்பட்டோர் கல்விக்காக மட்டும் ரூ 470 இலட்சம் அளவில் செலவிடுகிறது; மத்திய அரசின் உதவி இந்த வகையில் மிகக் குறைவு.

சமூகத்தின் பலவீனமான பகுதியினரான பிற்பட்ட வகுப்பினர் — தாழ்த்தப்பட்ட மக்கள் — மலைசாதி மக்கள் ஆகியோருக்கு அரசுப் பணிகள் அளிப்பதில் பொருள் பொதிந்த முறையில் ஒதுக்கீடுகள் செய்து — வாய்ப்புக்கள் பல அளித்துள்ளோம்; கல்வித் துறையிலும் ஒதுக்கீடுகள் செய்துள்ளோம்.

பிற்பட்ட வகுப்பினருக்கு 31 சதவிகிதமும் — தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு 18 சதவிகிதமும் ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.

சமத்துவத்தை நோக்கி முன்னேற்றம்

தமிழ்நாடு அரசு தனது நேரடி மேற்பார்வையில் இரண்டு துறைகள் மூலம் மாணவர் விடுதிகளை நடத்துகின்றது; இந்தத் துறைகளில் ஒன்று — தாழ்த்தப்பட்ட மக்களுக்கான அரிசன நலத் துறை; மற்றொன்று — பிற்பட்டோர் நலத் துறை.

அரிசன நலத் துறைமூலம் நடைபெறும் மாணவர் விடுதிகளின் முக்கியக் குறிக்கோள், அரிசன மாணவர்களுக்கும் — மலைசாதி வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் உணவும், தங்குமிடமும் அளிப்பதாகும்.

இதே போன்று, பிற்பட்டோர் நலத் துறையின்கீழ் உள்ள மாணவர் விடுதிகள்மூலம் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் — பட்டியலில் இல்லாத மலைசாதி பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோருக்கு உணவும், தங்குமிடமும் அளிப்பதாகும்.

எனினும், இந்த மாணவர் விடுதிகளில் குறிப்பிட்ட மாணவர்களை மட்டும் சேர்ப்பதோடு நிறுத்திக் கொள்வதில்லை; இவர்களுடன் மற்றெல்லா வகுப்பைச் சேர்ந்த மாணவர்களையும் சேர்த்துக் கொள்கிறோம்; இதன்மூலம், சமுதாய ஒருமைப்பாட்டையும் — சமத்துவத்தையும் நோக்கி முன்னேற முடியும் என நம்புகிறோம்.

சதவிகித அளவில் இடங்கள் ஒதுக்கீடு

பிற்பட்டோர் நலத் துறையின் மூலம் நடைபெறும் 116 மாணவர் விடுதிகளில் 65 சதவிகித இடங்களை மட்டும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அளித்துவிட்டு, எஞ்சிய 35 சதவிகித இடங்களைத் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் — முன்னேற்றமடைந்த சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோருக்கு அளிக்கின்றோம்.

இதேபோன்று, பட்டியலில் இல்லாத மலைசாதியினருக்கென நடத்தப்படும் 60 சதவிகித இடங்களை அந்த வகுப்பு மாணவர்களுக்கு அளித்துவிட்டு, எஞ்சிய இடங்களில் பிற்பட்ட மாணவர்களுக்கு 10 சதவிகிதமும் — அரிசன மாணவர்களுக்கு 25 சதவிகிதமும் — முன்னேற்றமடைந்த சமூக மாணவர்களுக்கு 5 சதவிகிதமும் அளிக்கின்றோம்.

ஒருங்கிணைந்த வாழ்வு — கல்வி

'இளமையிலேயே தக்கபடி பயிற்றுவிக்க வேண்டும்' என்பது எங்கள் கொள்கை; ஒரு மைப்பாட்டிற்கான அடிப்படை இதன் மூலம் உறுதியாகின்றது.

'சாதி' என்பது — ஒரு வழக்கொழிந்து போன நடைமுறை — அதன் அச்சுறுத்தல் இப்போது எவ்விதத்திலும் கிடையாது — என்ற நிலைமை எங்கள் கண்முன்னால் தெரிகிறது.

இப்படிப்பட்ட ஒருங்கிணைந்த வாழ்வும் — ஒருங்கிணைந்த கல்வியும் நம்முடைய குறிக்கோளை நிறைவேற்றும் என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை; இதை நீங்கள் ஏற்பீர்கள் என்பதில் ஐயமில்லை.

நியாயபூர்வ உரிமையுடன் நிதியுதவி கேட்கிறோம்

பிற்பட்ட மக்களின் கல்விக்காகச் செலவிடப்படும் தொகையில் பெரும் அளவு, மாநில அரசின் கருவூலத்திலிருந்தே அளிக்கப்படுகின்றது.

இந்த மாணவர்களுக்கான விடுதிகள் பல — வாடகைக் கட்டடங்களில் உள்ளன; அவை தக்க வசதியோடு இல்லை; எனவே, மேலும் மாணவர் விடுதிகளைக் கட்ட நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

எனவே, எனது துறையின் மாணவர் விடுதிக் கட்டடத்திற்கான பெரிய திட்டத்திற்கு மத்திய அரசு முழு அளவில் நிதியுதவி அளிக்க வேண்டும் என்று நியாயபூர்வ உரிமையோடு வேண்டுகிறேன்.

மலைசாதி மக்களுக்கு உதவி மறுப்பதேன்?

பட்டியலில் சேர்க்கப்படாமல் ஒதுக்கப்பட்டிருக்கும் மலைசாதி மக்கள் பற்றித் தனிக் கோரிக்கை ஒன்றை இங்கே விடுக்க விரும்புகிறேன்.

நான்காவது திட்டத்தில் இந்த இனத்தின்கீழ் மத்திய அரசு, திட்ட வேலையாக ரூ. 90 இலட்சம் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்திருக்கிறது; இதற்கு அனைத்திந்திய அளவில் மொத்த ஒதுக்கீடு ரூ. 450 இலட்சமாகும்; இதன்மூலம் தமிழ்நாட்டிற்கான ஒதுக்கீடு ஐந்தில் ஒன்றாகும்; ஆனால் இங்குள்ள பட்டியலில் இல்லாத தொகை, நாட்டின் மொத்த அளவில் மூன்றில் ஒரு பகுதியாகும்.

எனவே, மக்கள் தொகை அடிப்படையில் இந்த ஒதுக்கீடு, தமிழ்நாட்டிற்கு மூன்றில் ஒரு பகுதி என்று திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இதுபற்றித் தமிழக அரசு வலியுறுத்திக் கூறியுள்ளது; இந்த ஒதுக்கீட்டை ரூ. 90 இலட்சத்திலிருந்து ரூ. 133 இலட்சமாக உயர்த்த வேண்டும்.

தற்போது நடைபெறும் திட்டத்திற்குப் பயன்படும் வகையிலாவது இந்த ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்தியிருக்கிறது; ஆனால் மத்திய அரசு இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை.

புள்ளிவிவரக் கணக்கு உண்மையை கூறுதா?

மத்திய அரசால் நிறுவப்படும் திட்டங்களுக்குத் தமிழ்நாட்டில் எவ்வளவு ஒதுக்கீடு மத்திய அரசால் செய்யப்படுகின்றதோ அதற்கு அதிகமான அளவில் தமிழக அரசு செலவு செய்கிறது; இந்த உண்மை, பின்வரும் விவரங்கள் மூலம் தெரியவரும் :—

ஆண்டு	மொத்தச் செலவு	மத்திய அரசு உதவி
	(ரூபாய் இலட்சக்கணக்கில்)	
1969—70	73 36	16 00
1970—71	85 40	18 50
1971—72	106 75	18 50
1972—73	127.54	18 50

எனவே, மத்திய அரசிடமிருந்து போதிய நிதியுதவி இல்லாத காரணத்தாலும் — ஏற்கனவே உள்ள திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழக அரசுக்குப் பெருஞ்சுமை ஏற்பட்டுள்ளதாலும் புதிய திட்டங்கள் எதனையும் தமிழக அரசு எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் உள்ளது.

வேளாண்மைத் திட்டங்கள் — வீட்டு வசதித் திட்டங்கள் போன்ற முக்கியத் திட்டங்களைக் கூட, இதனால் கடந்த மூன்றாண்டுக் காலமாக நிறுத்திவைக்க வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலும் பட்டியலில் இல்லாத மலைசாதியினருக்காகத் தமிழக அரசு கிட்டத்தட்ட 300 பள்ளிகளை நடத்துகிறது; மாணவர்களுக்காக உணவு விடுதிகள் 46 நடத்தப்படுகின்றன.

நிதியுதவி கிடைத்தால் நிறுத்தப்பட்ட திட்டங்களைத் திரும்பத் தொடங்க இயலும்

போதிய நிதியுதவி அளிக்கப்படுமானால், மேற்கூறியவாறு நிறுத்தப்பட்டுள்ள திட்டங்களைத் திரும்பவும் துவக்க முடியும்; அத்துடன்—

மெட்ரிக் பிற்காலப் படிப்புக்குத் தனிப் பயிற்சி நிலையங்கள்—

பால் விநியோகக் கூட்டுறவுச் சங்கங்கள்—

தொழிற் பயிற்சி வசதிகள்—

ஆகிய புதிய திட்டங்களையும் துவக்க முடியும்.

எனவே, இந்த மலைசாதி மக்களுக்குச் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீட்டை மத்திய அரசு அதிகரிக்க வேண்டும்; மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்ற உடனடியாக ரூ. 25 இலட்சம் மானியமாக அளிக்க வேண்டும்.

முழு அளவில் நிதியுதவி தேவை

தமிழ்நாட்டில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளில் பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் கலந்துகொள்ளும் வகையில் அவர்களுக்கான பயிற்சி நிலையங்களைத் தமிழ்நாடு அரசு நடத்துகின்றது; இதற்கு மத்திய அரசிடமிருந்து எவ்விதமான உதவியும் கிடையாது.

தமிழ்நாடு அரசு சலவைத் தொழிலாளருக்கான சலவைத் துறைகள் கட்டித் தருகின்றது.

முடிதிருத்தும் தொழிலாளர் ஆகியோருக்குத் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் கருவிகள் ஆகியன அளிக்கின்றன.

குறைந்த வருமானக்காரர்களுக்கான 'ஸ்காலர்ஷிப்'பை மத்திய அரசு நிறுத்திவிட்டது; ஆனால் அதனை நாங்கள் தொடர்ந்து அளித்து வருகிறோம்; அதற்கான செலவுகள் முழுவதையும் தமிழ்நாடு அரசே ஏற்று வருகிறது.

பிற்பட்ட வகுப்பினரைக்கான இந்த 'ஸ்காலர்ஷிப்' திட்டத்திற்கு மத்திய அரசு முழு அளவில் உதவி செய்யவேண்டும்.

மாணவர் விடுதிகள் கட்டவும் — நடத்தவும் நிதி உதவி—

பட்டியலில் இல்லாத மலைசாதி மக்களுக்கான நலத் திட்டங்களுக்கு பெரிய அளவில் நிதியுதவி—

மேலே எடுத்துக்கூறப்பட்டுள்ள பிற திட்டங்களுக்கான உதவி—

ஆகியன அளிக்க வேண்டும் என்று மீண்டும் ஒருமுறை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்."

பரிசுச் சீட்டு மூலம் மைசூர் அரசுக்குக் கிடைத்த இலாபம்

மைசூர் அரசுக்கும் பரிசுச் சீட்டு மூலமாக இதுவரையில் ரூ 5.51 கோடி வருமானம் கிடைத்திருக்கிறது.

மைசூரில் பரிசுச் சீட்டு ஏற்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன.

இத்தகவலை, மைசூர் நிதியமைச்சர் எம். ஒய். கோர்பாடே மைசூர் மேலவையில் தெரிவித்தார்.

"இதுவரையில் ரூ. 69 இலட்சம் மதிப்புள்ள பரிசுத் தொகையை யாருமே கோரிப் பெற முன்வரவில்லை" என்றும் அவர் சொன்னார்.

பாசனத்துக்குத் தரையடி நீர்

குழாய்க் கிணறுகள் மூலம் வெளிக்கொணரும் திட்டம்

புதுவை - கோவை — நாகை — தஞ்சை பகுதிகளில் ஆய்வு

சென்னை, சூலை 27—

புதுவை — காரைக்கால் பகுதியில் பாசன வசதிக்காக ஏழு குழாய்க் கிணறுகளைத் தோண்ட மத்திய தரையடி நீர் வாரியம் முடிவு செய்திருக்கிறது

இந்த வேலை இன்னும் இரு வாரங்களில் தொடங்கப்படும் என்று தெரியவருகிறது.

இப்பகுதியில் நடத்தப்பட்ட துவக்கக் கட்ட சோதனைகளிலிருந்து 500 அடி அல்லது 600 அடி ஆழத்தில் கூட நீரில் உப்பு கலந்திருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

ஆகவே, 1,500 அடி அல்லது அதைவிட ஆழத்தில் குழாய்க் கிணறுகளை அமைப்பதென மேற்படி வாரியம் முடிவு செய்திருக்கிறது.

இதற்குத் தேவையான சில கருவிகள் விரைவில் வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாகைப் பகுதியில் :

நாகப்பட்டினத்துக்கு அருகில் பார்ப்பனச்சேரி காவிரி கழிமுகப் பகுதியில் ஏற்கனவே 1,000 அடி ஆழத்தில் ஒரு கிணறு தோண்டப்பட்டிருக்கிறது.

கோவைப் பகுதியில் :

கோவை நொய்யல் ஆற்றுப் பகுதியிலும் — கேரளத்தில் பொன்னானி ஆற்றுப் பகுதியிலும் ஆய்வு நடத்த இரு திட்டங்களையும் இந்த வாரியம் வகுத்துள்ளது.

அதுபோல், கோலார் பகுதியிலும் — தெலிங்கானா பகுதியிலும் தரையடி நீர் ஆய்வு நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

தஞ்சைப் பகுதியில் :

தஞ்சையின் காவிரி கழிமுகப் பகுதியில் 1970—71-ம் ஆண்டில் 15 கிணறுகளையும் மத்திய தரையடி நீர் வாரியம் தோண்டியிருக்கிறது.

அந்தப் பணி முடிந்துவிட்டபடியால், அக்கிணறுகள் விரைவில் தமிழக அரசிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரியவருகிறது.

படை வலிமையைப் பெருக்குகிறது சீனா

'இரஷ்யாவுக்கு ஈடாக ஏவுகணைகள் இல்லை' எனத் தகவல்

நியூயார்க், சூலை 27—

"நுட்பமான அணு ஆயுதங்களுடன் தனது இராணுவ வலிமையை சீனா பலப்படுத்துகிறது; சீன விமானப்படையில் தனி ரகப் போர் விமானங்கள் இடம் பெறுகின்றன; இவ்வாறு தனது பாதுகாப்பு உத்தியில் சில அடிப்படை மாறுதல்களை சீனா செய்து வருகிறது"

என்று 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை கூறியிருக்கிறது; அது மேலும் குறிப்பிட்டிருப்பதாவது :—

சீனா — இரஷ்யா எல்லையில் சுதாராறுக்குரிய பகுதிகளில் இரஷ்ய இராணுவம் நுழைவது இயலக் கூடியதே என்று சீனா கருதுகிறது; எனவே தனது பாதுகாப்புத் துறையை சீனா வலிமைப்படுத்துகிறது; அண்மைக்காலமாக சீனாவில் சிறு அணு ஆயுதங்கள் சோதனை செய்யப்பட்டு வருவதும், 'எப்-9' போர் விமானங்கள் பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருவதும் சீனா தனது இராணுவத்தைப் பலப்படுத்துகிறது என்ற கருத்துக்கு வலுவூட்டுகின்றன.

"சீனாவிடம் குறைந்தபட்சம் சுமார் 50 முதல் 100 வரையில் நுட்பரக அணு ஆயுதங்கள் இருக்கும்" என்று மதிப்பிடப்படுகிறது; 'இது சரியான மதிப்பீடு அல்ல' என்று கருதுவோரும் உள்ளனர்; ஏராளமான அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய அளவில் யுரேனியத்தையும் — அலுமினியத்தையும் தயாரிக்கும் நிறுவனங்கள் சீனாவில் மூன்று உள்ளன.

"6 400 கிலோமீட்டர் தொலைவிலிருந்து 9 600 கிலோமீட்டர் தொலைவு வரையில் செல்லக் கூடிய கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் 5 முதல் 15 வரையில் சீனாவிடம் உள்ளன" என்று சொல்லப்படுகிறது. 969 கிலோ மீட்டர் தொலைவுவரை சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகள் சீனாவிடம் 15 முதல் 30 வரை உள்ளன.

"ஆனால், இரஷ்யாவிடம் நிறைய ஏவுகணைகள் இருக்கின்றன; அவற்றைப் பயன்படுத்தும் அளவுக்கு தனது ஏவுகணைகளின் வலிமையைப் பெருக்கச் சீனாவுக்கு பல ஆண்டுகள் பிடிக்கும்" என்பது அமெரிக்காவின் மதிப்பீடு ஆகும்."

சித்த மருத்துவர் பதிவு பெற எழுத்து மூலத் தேர்வு

புதுக்கோட்டை, சூலை 26—

சித்த மருத்துவ அமைப்பில் ஆர்.ஐ எம்.பி. பதிவுகள் முறையாகத் தகுதியின் அடிப்படையில் பதிவு செய்யப்படுவதில்லை என்று புதுக்கோட்டை மத்திய சித்த மருத்துவக் கழகம் பல முறை மாநில அரசின் சுகாதார அமைச்சருக்குத் தீர்மானங்கள் மூலம் தெளிவுபடுத்தியது.

இச்சங்கங்களின் தீர்மானங்களைப் பரிசீலித்த மாநில மக்கள் நல்வாழ்வுத் துறை, தற்போது பரம்பரை சித்த வைத்தியப் பதிவுக்கான தேர்வில் அல்லது ஆர்.ஐ எம்.பி. பதிவு செய்து கொள்ளும் முறையில் சில மாற்றங்களைச் செய்துள்ளது.

அம்மாற்றங்களின் விளைவாக, இதுவரையில் நேர்முகமாக வாய்மொழித் தேர்வில் மட்டும் பங்கு கொண்ட ஆர்.ஐ எம்.பி பதிவு உறுப்பினர்கள், இனிமேல் அந்நேர்முக வாய்மொழித் தேர்வுடன் எழுத்து மூலமாகத் தேர்வு ஒன்றையும் எழுதியாக வேண்டும் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இம்மாற்றம் மிகவும் அவசியமானதென்றும், தரமான மருத்துவர்களை உருவாக்க அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை பாராட்டுக்குரியதென்றும், எங்கள் கழகத்தின் பல கோரிக்கைகளில் ஒன்றான இந்தக் கோரிக்கையை அரசு ஏற்று நிறைவேற்றியது என்ற பெருமை ஒன்றினையும் தாம் பெருவதாகவும் மத்திய சித்த வைத்திய கழகத் தலைவர் டாக்டர் திரு. ஆர். சௌமியநாராயணன் தெரிவித்துள்ளார்.

அடிப்படைச் சுகாதார வசதிகள்

தேவைப்படும் பணத்தை ஈடுகட்டப் புதிய வரி

மக்கள் நல்வாழ்வு அமைச்சர்கள் மாநாட்டின் பரிந்துரை

புதுடில்லி, சூலை 27—

"மக்களுக்குத் தேவையான குறைந்தபட்ச மருத்துவ வசதியை அளிக்கும் பொருட்டுச் சுகாதார வரி அல்லது நேரடிக் கட்டணம் ஒன்றை விதிக்கலாம்"

என்று இந்த இரண்டு நாட்கள் நடைபெற்ற மாநில நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் மாநாடு பரிந்துரை செய்திருக்கிறது.

"அந்தந்த வட்டார நிலைக்கேற்றவாறு இந்த வரி இருக்கலாம்" என்று மாநாடு கருதியது.

மக்களின் அடிப்படை மருத்துவ வசதியை நிறைவேற்றவே பெரும் நிதி தேவைப்படுவதால் இவ்வரி விதிப்பை மேற்கொள்ளலாம் என்றும், மற்ற வெளிநாடுகளிலெல்லாம் இந்த வரி விதிக்கப்படுகிறதென்றும் கூறப்பட்டது; இந்தியாவில்கூட சில பகுதிகளில் இந்த வரி விதிக்கப்பட்டு வருகிறது.

கிராமங்களுக்கான தேசிய சுகாதாரத் திட்டத்தில் என்னென்ன மாறுதல்களைச் செய்யலாம் என்பதை ஆராய மத்திய அமைச்சர் சட்டோபாத்தியாயா தலைமையில் உயர் அதிகாரக் குழு ஒன்றை அமைக்கவும் மாநாடு பரிந்துரை செய்கிறது.

தமிழகம் உட்பட பல மாநிலங்களைச் சேர்ந்த நல்வாழ்வுத் துறை அமைச்சர்களும் இக்குழுவில் உறுப்பினர்களாக இருப்பர்.

தேசிய சுகாதாரத் திட்டத்தின் படி, சுமார் 2½ இலட்சம் இந்திய முறை — மற்றும் ஒமியோபதி மருத்துவர்களை நாடெங்கிலும் நியமிக்க மத்திய சுகாதார அமைச்சகம் முடிவு செய்திருக்கிறது.

இவர்களில் ஒவ்வொருவரிடமும், இரண்டு அல்லது மூன்று கிராமங்களைச் சேர்ந்த 2,000 பேர்களின் பொறுப்பு இருக்கும்; இவர்களுக்கு கௌரவ ஊதியமாக ரூ. 150 தரப்படும்.

நோயாளிகட்கு இவர்கள் பரிந்துரை செய்யும் மருந்துகளை, அரசாங்க மருந்து ஸ்டோர்களிலேயே வாங்கினால் சிறப்புச் சலுகையும் இவர்களுக்குத் தரப்படும்.

மேலும் 10 காசுகளிலிருந்து 25 காசுகள் வரை கட்டணம் வசூலிக்கவும் இவர்கள் அனுமதிக்கப்படுவர்; இதன் மூலம், மேலும் ரூ 50 இவர்களுக்குக் கிடைக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

இப்படிப்பட்ட 29 முன்னோடித் திட்டங்கள், மாநிலங்களில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மேலும் தீவிரப்படுத்தி, 1974-ம் ஆண்டுக்குள் பிறப்பு விகிதத்தை 1,000-த்துக்கு 32 ஆகவும், அடுத்த 5 ஆண்டுகளில் அதை 25 ஆகவும் குறைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று மாநாடு முடிவு செய்தது.

இந்தியன் பாங்கியின் புதிய கிளைகள்

சென்னை, சூலை 26—

இந்தியன் பாங்கியின் புதிய கிளை ஒன்றை சென்னை — எட்வர்டு எலியட்ஸ் சாலையில் டாக்டர் திரு மதி ஈ. வி. கல்யாணி திறந்துவைத்தார்.

பாங்கியின் செயலாளர் திரு. வெங்கட்ராமன் அனைவரையும் வரவேற்றார்; 'மயிலாப்பூர்ப் பகுதியில் இது இரண்டாவது கிளையாகும்' என்று அவர் கூறினார்.

திரு. வீரராகவன் நன்றி கூறினார்.

சென்னையை அடுத்து தொழில் நகராக வளர்ந்துவரும் போரூரில் இந்தியன் பாங்கியின் மற்றொரு கிளை திறக்கப்பட்டது; இதனை டபுள்யூ. எஸ். இன்சுலேட்டர் நிறுவன நிர்வாகி திரு. வி. சீனிவாசன் திறந்துவைத்தார்.

இந்தக் கிளையுடன் சேர்த்து இதுவரையில் இந்தியன் பாங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 337 ஆகும்.

அரூர் வட்ட இலக்கிய மன்றம்

கவிதைப் போட்டி அறிவிப்பு

அரூர் வட்ட இலக்கிய மன்றத்தார் நடத்தும் ஒன்பதாவது கவிதைப் போட்டிக்குக் கவிதை அனுப்ப விழைவோர் 10—8—72க்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் :—

கவிதை 'வள்ளுவன் கண்ட காமம்' என்ற தலைப்பில் 40 வரிக்குள் அடங்கியிருக்கவேண்டும்.

ஒவ்வொரு கவிதையுடனும் கட்டணமாக ரூ. 1 தலையாகவோ — பணமாகவோ — ஆர்டராகவோ அனுப்பவேண்டும்.

கவிதைக்கு மூன்று பரிசுகள் உண்டு.

கவிதை அனுப்பவேண்டிய முகவரி :— தே வே. சந்தானம், தலைவர், அரூர் வட்ட இலக்கிய மன்றம், அரூர். (தருமபுரி மாவட்டம்.)

பருவ மழை தவறியதால் ஏற்படக்கூடிய நிலை

மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் கவலை

புதுடில்லி, சூலை 27—

கடந்த இரு வாரங்களாக நாட்டின் எந்தப் பகுதியிலும் மழையே பெய்யாதது குறித்து மத்திய வேளாண்மைத் துறை அமைச்சகத்தினர் பெரிதும் கவலை தெரிவித்துள்ளனர்; 'பருவ மழையையே நம்பியுள்ள நிலைப் பயிர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படும்' என்று அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு பருவ மழை மிகவும் தாமதப்பட்டது; பின்னர் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் பரவலாக மழை பெய்தபோது விவசாயிகளிடையே பெரும் திருப்தி ஏற்பட்டது; வழக்கமாக விட்டு விட்டும் பெய்யக்கூடிய மழை திடுதிடுப்பென்று நின்றுவிட்டது; இதனால் விவசாயிகளிடையே கவலை ஏற்பட்டுள்ளது.

"1971—72-க்கான உணவுத் தானிய உற்பத்தி, அதற்கு முந்தைய ஆண்டில் கிடைத்த 1,078 இலட்சம் டன்களைவிட அதிகரிக்கும்" என்று விவசாய அமைச்சகம் மதிப்பிட்டிருந்தது; 'இந்த ஆண்டில் இதுவரை எப்போதுமே இல்லாத அளவில் 1,100 இலட்சம் டன் உணவுத் தானிய உற்பத்தி இருக்கும்' என்றும் அது நம்பிக்கை தெரிவித்திருந்தது; ஆனால், இப்போது பருவ மழை தவறியுள்ளதை நோக்குகையில், இந்த மதிப்பீடு நிறைவெய்துமா என்று அமைச்சகம் ஐயம் தெரிவித்துள்ளது.

கோதுமை உற்பத்தியில் 30 இலட்சம் டன் அதிகமாகி — மொத்தம் 270 டன்களாக உயர்ந்துவிடும்; ஆனால் நெல் விளைச்சல் குறைந்துவிடும் என்று கூறப்படுகிறது; ஆந்திரத்திலும் — மைசூரிலும் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் இந்த மாநிலங்களில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் சோளம் — கம்பு — மக்காச் சோளம் ஆகியவற்றின் உற்பத்தியும் பாதிக்கப்படும்.

உணவுத் தானியக் கையிருப்பு நிலைமை திருப்தியாக இருப்பினும், தொடர்ந்து இரு முறை பருவ மழை தவறினால், நிலைமை மிகவும் சிக்கலானதாகிவிடும் என்று அஞ்சப்படுகிறது; சென்ற ஆண்டு வங்க தேச அகதிகள் பிரச்சினை சிரமமின்றி சமாளிக்கப்பட்டது; ஆனால் இப்போது பருவ மழை தொடர்ந்து தவறினால் நிலைமை மிகவும் மோசமாகும் என்று கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட

தி. மு. கழக 5-வது மாநாடு

1972 ஆகஸ்டு 5, 6 (சனி — ஞாயிறு) ஆகிய நாட்களில்

மதுரை பந்தயத் திடலில் — வி. எஸ். எஸ். மணி பந்தலில் — நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அரங்கத்தில் நடைபெறும்.

தலைவர் : முரசொலி மாறன் எம்.பி.

திறப்பாளர் : எஸ். கணேசன் எம்.எல்.ஏ.

அண்ணா படத் திறப்பாளர் : பி. கே. மூக்கையா தேவர் எம்.பி.

கழகத் தலைவர் — பொதுச்செயலாளர் — பொருளாளர் — புரட்சிநடிகர்

டாக்டர் கலைஞர் — டாக்டர் நாவலர் — எம். ஜி. ஆர்.

மற்றும் அமைச்சர்கள் — நாடாளுமன்ற — சட்டமன்ற — உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் — கழக முன்னணியினர் கலந்துகொள்வர்

ஆக. 5-ம் நாள் இரவு 10-மணிக்கு டாக்டர் கலைஞர் எழுதிய சிவகங்கை சேதுராசன், இராமராவ் நடிக்கும் 'உன்னைத்தான் தம்பீ' (கழகப் பிரச்சார நாடகம்)

ஆக. 6-ம் நாள் இரவு 10-மணிக்கு முரசொலி அடியார் முஜிபுர் ரகிமானாக நடிக்கும் 'தங்க வங்கம்' (மாநில சுயாட்சிக் குரல் எழுப்பிய வங்காளத் தலைவரின் வரலாற்று நாடகம்)

இரு நாட்களுக்கும் சேர்த்துக் கட்டணம் : ரூ. 10; 5; 2. — — பெண்களுக்கு ரூ. 1.

4—8—72 அன்று மாபெரும் ஊர்வலம் நடைபெறும்.

வரவேற்புக் குழுத் தலைவர் : எஸ். முத்து எம்.எல்.சி.

செயலாளர்கள் : பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., கு. திருப்பதி எம்.எல்.ஏ., காவேரி மணியம் எம்.எல்.ஏ.

பொருளாளர் : வெங்கிடசாமி

தொண்டர் படைத் தலைவர்கள் : பொன். முத்துமிங்கம், மு. காதர்சா, திருமதி தேவகி பாண்டியன் எம்.சி., ஏ. பி. இராசு, பொ. இராமச்சந்திரன்

கேரளக் கல்லூரிகள் பிரச்சினை

டில்லி மேலிடத்தில் பெருங்கவலை

என்றாலும் மாநில அமைச்சரவைக்கு அச்சுறுத்தலாகாதாம்

புதுடில்லி, சூலை 28 —

"கேரளத்தில் தனியார் கல்லூரிகள் இன்னமும் திறக்கப்படாமல் இருப்பதால், அவைகளை அரசு மேற்கொள்ளுவதற்கான அவசரச் சட்டத்தின் நகல் ஒன்று மத்திய அரசுக்குக் கிடைத்திருக்கிறது"

என்று மத்திய அரசின் உள்துறைத் துணையமைச்சர் கே. சி. பந்த் இங்கு அறிவித்தார்; இதன் அரசு பரிசீலித்து வருவதாக அவர் கூறினார்.

ஆயினும் இம்பிரச்சினையில், அரசுக்கும் -- கல்லூரி நிர்வாகங்களுக்கும் இடையே உள்ள வேற்றுமை மிகவும் குறுகியதாக இருப்பதால் இரு தரப்பினரும் சுமுகமான ஒரு முடிவுக்கு வர முடியும் என்று தாம் நம்புவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கேரள மாணவர்களின் எதிர்காலக் கல்வி நிச்சயமற்ற நிலையில் இருந்து வருவதால் அமைச்சர் பந்த் கவலை தெரிவித்தார்; 'இதனைக் கருத்தில் கொண்டாவது, அரசுடன் நியாயமான ஒரு உடன்பாட்டுக்கு கல்லூரி நிர்வாகிகள் முன்வர வேண்டும்' என்று அந்த கேட்டுக் கொண்டார்.

"கல்லூரிப் பிரச்சினை, எந்த விதத்திலும் கேரள அமைச்சரவைக்கு அச்சுறுத்தலாக அமையாது" என்றும் அவர் கூறினார்.

"அண்மையில் ஐராமாத்தில் கேரளத்து தலைவர்களுக்கும் -- தலைமையமைச்சருக்கும் இடையே இது குறித்து நடைபெற்ற விவாதம் நன்கு வெளிப்படுத்தும்" என்றார் அவர்.

கேரளத்தில் ஆறு கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டணி அமைச்சரவை பதவி வகிக்கிறது; புதுக் காங்கிரசும் அமைச்சரவையில் இருக்கிறது; ஆனால், வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த அச்சுத மேனன்தான் முதலமைச்சராக இருக்கிறார்; இந்தக் கூட்டணிதான் கட்டணக் குறைப்புக் கொள்கையை வலியுறுத்தியது.

கட்டணக் குறைப்பு அவசியம் தான் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

கட்டணத்தைக் குறைத்தல், அதற்கு ஏற்றபடி அரசு மானியத் தொகையை உயர்த்த வேண்டுமென்று தனியார் கல்லூரி நிர்வாகிகள் கேட்கின்றனர்.

மாணவத் தொகையை உயர்த்த வேண்டுமானால் தனியார் கல்லூரி நிர்வாகிகள் சில நிபந்தனை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று அரசு கூறுகிறது.

தகராறுக்குக் காரணம்?

கேரளத்தில் 104 தனியார் கல்லூரிகள், கோடை விடுமுறைக்குப்பின் திறக்கப்படவில்லை.

கோடை விடுமுறை முடிந்து 40 நாட்களாகியும் இந்தக் கல்லூரிகள் இன்னும் மூடிக்கிடக்கின்றன; இந்தக் கல்லூரிகளில், ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்றனர்.

10 அல்லது 12 அரசுக் கல்லூரிகளும், 37 தனியார் கல்லூரிகளும்தான் விடுமுறைக்கும் பிறகு திறக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலைமைக்கு என்ன காரணம்? இந்தக் கல்வியாண்டிலிருந்து தனியார் கல்லூரி மாணவர்களிடமிருந்து வசூலிக்கும் சம்பளக் கட்டணத்தை ஊறறியமைக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட்டது.

அரசுக் கல்லூரிகளிலிடத் தனியார் கல்லூரிகளில் அதிகச் சம்பளம் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது; இதை அரசுக் கட்டணத்துக்குச் சரியாகக் குறைக்க வேண்டும் என்பதுதான் அந்த உத்தரவு.

தமிழகமுதலிவருக்கு இந்திரா கடிதம்

வ. உ. சி. சிலைத் திறப்பு விழாவிலிகலந்துகொள்ள ஒப்புதல்

சென்னை, சூலை 28—

தமிழ்நாடு முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி கூறியிருப்பதாவது:—

"தூத்துக்குடியில் செப்டம்பர் 5-ந் தேதி சிதம்பரம் பிள்ளை அவர்களின் உருவச் சிலையை நான் திறந்து வைக்கவேண்டும் என்று ஜராமாத்தில் எனக்கு நினைவூட்டினீர்கள்.

"அங்கிழச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன்.

'தங்களுக்குப் பதில் எழுதத் தாமதம் ஏற்பட்டதற்குக் காரணம், இந்த நிகழ்ச்சியை மிகவும் அதிகமாக உள்ள நிகழ்ச்சி நிரலில் இணைக்கவேண்டுமென்றுதான்."

கொடைக்கானலில் இணைப்புர் சாலைகள்

மதுரை, சூலை 27—

கொடைக்கானல் மலையில் உள்ள பல்வேறு சுற்றுலா நிலையங்களையும் இணைக்கக்கூடிய சாலைகளைத் திரத்திப்பலமைக்கத் தமிழ்நாடு அரசு எண்ணியிருக்கிறது.

இந்தச் சாலைகள் ரூ. 2.50 இலட்சம் செலவில் அமைக்கப்படும்; இந்த வேலை விரைவில் நடைபெறும்.

இத்தகவலை மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு ஏழை மாணவர்களுக்கு இங்கு இலவச விடுமுறைவதித்திட்டம் செயலாக்கப்பட்டது; இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

தற்போதைய பரீட்சை முறை பயனற்றுவிட்டது

மத்திய கல்வியமைச்சரே கூறுகிறார்

புதிய மாறுதல்கள் செய்யப்படும்' எனத் தகவல்

பூனா சூலை 28—

"தற்போதைய பரீட்சை முறையில் எனக்கு அறவே நம்பிக்கை இல்லை; இந்த முறை அடியோடு தோற்கடிக்கப்பட்டது; இது எவ்வளவு விரைவில் மாற்றப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது."

என்று மத்திய கல்வியமைச்சர், நூருல் ஹாசன் நிருபர்களிடம் தெரிவித்தார்; இத் தொடர்பில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:—

"பெரும் அளவில் காப்பியடித்தல் -- முன் யோசனையற்ற மதிப்பீடு போன்ற ஒழுக்கீனங்கள் மலிந்துவிட்டன; அறிவு வளர்ச்சிக்காக கற்பிப்பது என்பதை பேய் 'பரீட்சைக்குத் தயார் செய்வதுதான் படிப்பு' என்றாகிவிட்டது.

தற்போதைய பரீட்சை முறையின் கவர்ச்சி போய் எத்தனையோ காலமாகிவிட்டது.

இது சம்பந்தமாக பல்கலைக் கழக மானியக் குழுவால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்; அதனுடைய பரிந்துரையின் அடிப்படையில், தற்போதைய பரீட்சை முறையை மேம்பாடு செய்வதற்கான சில முடிவுகள் செய்யப்படும்."

இலண்டன் மருத்துவமனையில் முஜிபுர் ரகிமான்

இலண்டன், சூலை 28—

வங்கதேசத் தலைமையமைச்சர் முஜிபுர் ரகிமான், அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் பொருட்டு நேற்று இங்கு வந்து சேர்ந்தார்.

'ஏர் இந்தியா' விமானத்தில் வந்த அவரது வருகை, இண்டன் விமான நிலையத்தில் நேற்றுமாலை பெற்ற மேகநிறுத்தம் காரணமாக 12 மணி நேரம் தாமதமாகியது.

அவரைப் பிரிட்டிஷ் வெளிநாட்டு அதிகாரிகளும், வங்கதேசத் தூதர் -- இங்கிலத் துணைத் தூதுவர் ஆகியோரும் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இலண்டனில் புகழ் பெற்ற கனியார் மகத்துவமனையான 'இலண்டன் கிளினிக்'கில் ரகிமானுக்குச் சிகிச்சை நடைபெறும்.

நிலவுப் பயண வீரர்கள் புரிந்த ஊழல்

ஒருவருக்குச் சிட்டு -- மற்றொருவர் பதவியிலிருந்து விலகல்

ஹஸ்டன், சூலை 28—

'அப்பாலோ--15' நிலவுப் பயணக் கப்பலின் தலைவராக இருந்த கர்னல் டேவிட் ஸ்காட் எனபவரை, நிர்வாகம் பதவிநீக்கம் செய்திருக்கிறது.

இவர் சக்திரனுக்குச் சில அஞ்சல் உறைகளை எடுத்துச் சென்று -- சக்திர மண்டல முத்திரையுடன் திருப்பக் கொண்டுவந்து அவை சில கள்ளத்தனமாக விற்றுப் பணம் ஈட்டியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

இந்த அஞ்சல் உறைகள் ஒவ்வொன்றையும் அவர் ஜெர்மனியில் ரூ. 10,950-க்கு விற்றதாகக் கூறப்படுகிறது.

அதே நிலவுக் கப்பலில் சென்ற மற்றொரு விமானியான ஜேம்ஸ் இர்வின் என்பவரும் இராஜிநாமா செய்திருக்கிறார்.

மாநில சுயாட்சி ஆபத்தானதா?

(1-ம பக்கத் தொடர்ச்சி)

துடன், விரைவில் இக் கோரிக்கை குறித்தது விவாதிக்க தேசிய அளவில் ஒரு கருத்தரங்கினைக் கூட்டவிருக்கிறார்.

"தமிழகத்துக்கு வெளியே பிற மாநிலங்களில் வாழ்கின்ற தமிழர்களும் -- வெளி நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களும், அவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் நடக்கின்ற நாட்டு நடப்புகளில் தீவிரக் கவனம் செலுத்தவேண்டும்.

"குறிப்பாக ஆந்திரத்தில் வாழ்கின்ற தமிழ் மக்களை அன்பரும், ஆந்திர மாநிலம் செழித்தோங்கிட அவர்கள் பங்கினைச் செலுத்திடவேண்டும்."

இரு மொழிக் கொள்கையின் சிறந்த பலன்

அமைச்சர் நாவலர் விளக்கம

விழாவில் கலந்துகொண்ட கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாணவர்கள் உள்ளங்களில் அறிவு நலம் வண்ணம் ஊய்ந்திட வேண்டும் -- என்ற நோக்கத்துடனேயே தமிழகத்தில் இரு மொழிக் கொள்கை வகுக்கப்பட்டது.

ஒரு மொழியைப் பயிலுவதானது அறிவைப் பெருகுவதற்காக இருக்கவேண்டுமே தவிர, ஒரு மொழிப் புலமைக்காக மட்டுமே இருக்கக் கூடாது.

தாய் மொழியில் பயிலுவதன் மூலம் மாணவர்கள் நன்மையடைகிறார்கள் என்பதால், தமிழ்ப் பாட மொழி ஆக்கம் அளிக்கப்பட்டுவருகிறது.

தமிழல்லாத வேறு மொழிகளைப் பாட மொழிகளாகக் கொண்டு பயில விரும்புவோருக்குச் சென்னை நகரில் எல்லா வசதிகளும் இருக்கின்றன."

வெளிமாநிலத் தமிழரிடைஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி

அமைச்சர் செ. மாதவன் பாராட்டு

சட்ட அமைச்சர் செ. மாதவன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில் கழக அரசு ஏற்பட்ட பிறகு தமிழகத்துக்கு வெளியே வாழ்கின்ற தமிழ் மக்களிடம் ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது; இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

30--7--72

தாராசுரம்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு கடைத் தெருவில்; கலை வர்: கே. ஜராசாங்கம்; பேசுவோர்: மு. கதிர்வேல்; எஸ்.ஆர். ஜராதா எம்.சி., சு. பத்மாபன், எஸ் விஜயராகவன், எஸ். கல்யாணசுந்தரம், ம. நாகராசன், எம். செல்வராசன்.

சேலம்

மத்தாவது வட்டத் தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு செவ்வாய்பேட்டை அப்பு செட்டித் தெருவில்; தலைவர்: டாக்டர் கே. ஆர். சோமால்; பேசுவோர்: அமைச்சர் க. ஜராசாராரன், திருப்பதூர் இராமமூர்த்தி, ஈ.ஆர். கிருஷ்ணன எம்.பி., கே. செயராமன் எம்.எல்.ஏ., எஸ். ஆறுமுகம் எம்.எல்.ஏ., ஏ. மாரிசப்பன் எம்.சி., எஸ். மெய்யப்பன் எம்.சி., அமாணுலாகான், ஆ. சின்னையன், தி.ய. ஆறுமுகம்.

சென்னை : 40 வது வட்டம்

கோவிந்தசாமி நினைவு மன்றச் சார்பில் மாலை 7 மணிசுவு பேசுவோர்: எனவி. கலைமணி; பி. எஸ். குமார், கே. குழந்தைவேலு மற்றும் பலர். (தமிழச்செல்வன் குழுவினரின் 'அனனன் காடிய வழி' என்ற பலகுரல் கலை நிழச்சி நடைபெறும்.)

குழுக் கூட்டம்

"திண்டுக்கல் வட்ட தி.மு.க. உறுபினாகள் கூடலம் 30-7-72 மாலை 3 மணிக்கு திண்டுக்கல தெற்கு வீதி சுகதாம திருமண மண்டபத்தில் நடைபெறும்" என்று வட்டச் செயலாளர் ப. காதத முத்து அறிவிக்கிறார்.

தமிழ்நாடு ஓமியோபதி கழகம்

முதலமைச்சர் கலைஞர் துவக்கிவைக்கிறார்

தமிழ்நாடு ஓமியோபதி கழகம், 1—8—72 மாலை 6-மணிக்கு சென்னை இராஜாஜி மணடபத்தில முதலமைச்சர் கலைஞர்அவர்களால் துவக்கி வைக்கப்படும்.

இவ்விழாவுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமை வகிப்பார்.

கடலூரில் கருத்தரங்கு

பேராசிரியர் அன்பழகன் கலந்துகொள்வார்

தென்னாற்காடு மாவட்ட உயர்நிலைப் பளளித் தலைமை ஆசிரியர்கள்--பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள் ஆகியோருக்கான மக்கள் தொகை இயல் கல்வி பற்றிய கருத்தரங்கு கடலூரில் ஜூலை 29, 30 ஆகிய நாட்களில் நடைபெறும்.

தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். சண்முக சிகாமணி தலைமையில் 29-7-72-ல் தமிழ்நாடு குடும்ப நலத்துறை உண் இயக்குநர் டாக்டர் பி. எஸ். வரதராசனுவ் தலைக்கிவைப்பார்.

தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறை, அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன அவர்களர் 30-7-72-ல் விழாவை சொற்பொழிவாற்றுவார்.

கருத்தரங்கில் பல்வேறு தலைப்புகளில் குழு விவாதங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிராகரிப்பு முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு எழுத்து அச்சகத்தில் (24, ஜானிகான் ரோடு சென்னை-79) அச்சிடப்பட்டு 1-8-72 அன்று வெளியிடப்பட்டது.